புத்தாண்டு சிறப்புக் கட்டுரை



ஹரே கிருஷ்ண
ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே
ஹரே ராம
ஹரே ராம
ராம ராம
ஹரே ஹரே

# ஏன் ஹரே கிருஷ்ண ஜபம் செய்ய வேண்டும்?



*ஸ்ரீலபிரபுபாதாவின் சீடர் தவத்திரு.ஜெயத்வைத ஸ்வாமி அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து . . .*

ஏன் ஹரே கிருஷ்ண மஹாமந்திர ஜபம் செய்ய வேண்டும்? என்பது குறித்து இங்கு கூறப்பட்டிருக்கும் காரணங்கள் அனைத்தும் ஸ்ரீமத் பாகவதம், பகவத்கீதை, உபநிஷத்துகள் மற்றும் இதர புராணங்களில் இருந்து தொகுக்கப்பட்டதாகும்.

★ ஹரே கிருஷ்ணா ஜபம், கடவுள் மீது அன்பை விழித்தெழச் செய்கிறது. ஹரே கிருஷ்ணா ஜபம் பக்க பலனாக முக்தியை கிடைக்கச் செய்கிறது. நீங்கள் ஹரே கிருஷ்ணா ஜபம் செய்யும் போது, தானாகவே அறிவும் பற்றின்மையும் உங்களுக்கு விருத்தி அடைகின்றன.

★ ஹரே கிருஷ்ணா ஜபம், பிறப்பு, இறப்பு என்னும் முடிவில்லா சக்கரத்திலிருந்து விடுதலை அளிக்கிறது.

★ ஹரே கிருஷ்ணா ஜபம், சண்டை சச்சரவு நிறைந்த இந்த கலியுகத்தில் மிகவும் சக்தி வாய்ந்த தன்னுணர்வுப் பாதை. இதுபோல் வேறு எதுவும் இவ்வளவு நன்றாக செயல்படுவதில்லை.

★ ஹரே கிருஷ்ணா ஜபம், நம்முடைய இதயத்தில் உள்ள பொய்த் தோற்றங்களையும் தவறாகப் புரிந்து கொண்ட அனைத்தையும் நீக்கி தூய்மைப்படுத்துகிறது. ஹரே கிருஷ்ணா ஜபம் செய்வதால் நீங்கள் எல்லா கவலைகளிலிருந்தும் விடுபடுவீர்கள்.

★ ஹரே கிருஷ்ணா ஜபம், உங்களை தன்னுணர்வு பெறச் செய்கிறது- மற்றும் தன்னுணர்வு பெற்ற ஒருவன் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று காட்டுகிறது. ஹரே கிருஷ்ணா ஜபம் இன்பத்தின் இருப்பிடமான கிருஷ்ணரை எப்போதும் நினைத்திருக்கச் செய்கிறது.

★ ஜபம் செய்ய எந்தவிதக் கட்டுப்பாடும் கிடையாது. நீங்கள் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஜபம் செய்யலாம். கிருஷ்ணர் அவருடைய நாமத்தின் ஆன்மீக ஒலி அதிர் வில் எப்போதும் இருக்கிறார். எவ்வளவு அதிக மாக அவர் நாமத்தை ஜெபம் செய்கிறோமோ அவ்வளவு அதிகமாக இதை நீங்கள் உணர லாம்.

★ மற்ற எல்லா வேத மந்திரங்களும் ஹரே கிருஷ்ண மகா மந்திரத்தில் அடங்கியுள்ளன. எனவே இதை ஜபம் செய்வதாலே நீங்கள் எல்லா வேத மந்திரங்களை ஜபம் செய்தால் ஏற்படும் பலன்களை பெறுவீர்கள்.

★ ஹரே கிருஷ்ணா ஜபம் உங்களை மட்டுமல்லாது உங்களை சுற்றியுள்ள அனைத்து ஜீவராசிகளையும் தூய்மைப்படுத்துகிறது. யாரெல்லாம் இதை கேட்கிறார்களோ அவர்களுக் கும் ஆன்மீக பலன் கிடைக்கிறது.



★ யாரொருவர் ஹரே கிருஷ்ணா ஜபம் செய்கிறாரோ அவருக்கு நல்ல குண நலன்கள் உண்டாகின்றன.

★ நீங்கள் ஹரே கிருஷ்ண மகாமந்திரத்தை மெல்லிய குரலில் ஜபம் செய்யலாம். அல்லது உரத்த குரலில் உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்ளோடு ஜபம் செய்யலாம். இரண்டுமே சமபலன் தரும். ஸ்ரீல பிரபுபாதா ஹரே கிருஷ்ணா மகாமந்திரம் ஜபம் செய்தார். அதேபோல் முற்காலத்தில் பெரும் ஆச்சார்யர்கள் ஜபம் செய்தனர். நீங்கள் ஏன் செய்யக் கூடாது?

★ இது முற்றிலும் இலவசமானது. ஹரே கிருஷ்ணா ஜபம் செய்வதில் உங்களுக்கு எந்த செலவுமில்லை.

★ ஹரே கிருஷ்ண ஜபம் செய்ய எந்த வித தகுதியும் தேவையில்லை. வயதானவர், இளம் வயதினர், எந்த இனத்தவர், எந்த மதத்தினர், எந்த நாட்டினர் ஆயினும் ஜபம் செய்யலாம்.

★ நீங்கள் ஹரே கிருஷ்ண ஜபத்தின் மொழியைப் புரிந்து கொள்ளாவிட்டாலும் அது உங்களுக்கு பயன் தருகிறது-

★ ஹரே கிருஷ்ணா ஜபம் எல்லாவிதமான துயரங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கும்.

★ ஹரே கிருஷ்ணா ஜபம் செய்வது எளிது. மிகச் சிறந்த முறை மிக எளிதாக இருக்கும்போது ஏன் வாழ்க்கையை நீங்கள் கஷ்டமாக்கிக் கொள்ள வேண்டும்?

★ ஹரே கிருஷ்ண ஜபம் ஆன்மீக அமைதியை உங்களுக்கும் உங்களைச் சுற்றியுள்ளோருக்கும் வழங்குகிறது.

★ நீங்கள் ஹரே கிருஷ்ணா ஜபம் செய்யும்போது, கிருஷ்ணரே திருப்தி அடைகிறார்.

★ நீங்கள் ஹரே கிருஷ்ணா ஜபம் செய்யும்போது, கிருஷ்ணர் உங்கள் நாவில் நடனமாடுகிறார்.

★ ஹரே கிருஷ்ணா ஜபம் செய்து நீங்கள் கிருஷ்ணர் உலகிற்கு திரும்பலாம். கிருஷ்ணலோகமே நித்தியமான பூரண ஆனந்தமான அறிவு நிறைந்த உலகம் ஆகும்.

★ ஹரே கிருஷ்ண ஜபம் நம்முடைய பற்பல பிறவிகளில் செய்த கர்மாக்களின் விளைவுகளிலிருந்து விடுதலை தருகிறது.

★ பகவான் கிருஷ்ணரின் புனித நாமத்தை தூய்மையாகவும் நம்பிக்கையோடும், ஒரே ஒருமுறை ஜபம் செய்தாலும் கூட, நீங்கள் எண்ணிலடங்கா கர்மவினைகளை



பெற்றிருந்தாலும் கூட அவற்றிலிருந்து விடுபடுவீர்கள்.

★ ஹரே கிருஷ்ண ஜபம், ஏமாற்றுத்தனமும் சண்டை சச்சரவுகளும் நிறைந்த இந்த கலியுகத்தின் பாவச்சூழலை எதிர்த்து செயல்படுகிறது.

★ ஹரே கிருஷ்ண ஜபம் செய்வதால் நீங்கள் ஒவ்வொரு அடியிலும் முழு அமிர்தத்தை பருகலாம். இதுதான் உண்மையான ஆன்மீக தாகம். ஹரே கிருஷ்ணா ஜபம் அதிகமாக பண்ணும்போது, இன்னும் நம்மை மேன்மையுறச் செய்கிறது.

★ நீங்கள் எல்லா வேத சாஸ்திரங்களை புரட்டிப் பார்த்தாலும், ஹரே கிருஷ்ண மஹாமந்திர ஜபத்தை விட உயர்ந்தது எதையும் கண்டறிய முடியாது.



ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

★ ★ ★

## ஜபமாலை + விளக்க புத்தகம்

ஹரே கிருஷ்ண ஜபம் செய்வதற்கான 108 மணி ஜப மாலையும், அதற்குரிய வழிகாட்டி புத்தகமும் இஸ்கான் கோயில்களில் கிடைக்கும்.





தவத்திரு. ஜெயத்வைத ஸ்வாமி அவர்கள் 1968ல் தனது 18வது வயதில் ஸ்ரீலபிரபுபாதாவின் சீடரானார். இஸ்கான் ஆரம்ப காலத்தில் மிகவும் பொறுப்பு மிக்க சேவைகளை ஆற்றியுள்ளார். குறிப்பாக பிரபுபாதாவின் புத்தகங்களை எடிட் செய்யும் முக்கியச் சேவையை ஆற்றியிருக்கிறார். இவரது கிருஷ்ண பக்தி கட்டுரைகள் மற்றும் சிறப்புரைகள் மிக மிக பிரசித்தி பெற்றது. கடந்த 50 வருடங்களாக உலகின் பல பகுதிகளுக்கும் சென்று ஹரே கிருஷ்ண ஜபத்தின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்து வரும் இவர், வேதஞானத்தில் ஆழ்ந்த தெளிவுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.